## திருமலை அநந்தாழ்வான்
## திருநாள் பாட்டு

திருவளர் வேங்கட மாமலையார்க்கு சிறுதொழில் செய்தவர் நாள்
தேவிதனக்கருள் வேங்கட மன்னவன் மட்புட்டில் சுமப்பவர் நாள்
மருமலர் சோலை மகிழ்ந்திட அம்மலை மன்னி அமர்ந்தவர் நாள்
மன்னரவின் பூதூரவன் மாமலர் மெல்லடி ஆயவர் நாள்
வருபொழில் பணி தீண்டிடவும் வாடுதலின்றி இருந்தவர் நாள்
வாரிதரு சூழ் வைணவர் ஆரியர் மத்தியில் ஆண்மகன் ஆயவர் நாள்
அருமறை உட்பொருள் ஆழ்ந்திடு வைணவ இலக்கணம் சொன்னவர் நாள்
அனைவர்களும் புகழ் சித்திரையில் கிளர் சித்திரை எனும் நாளே

---